ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2022 பெப்புருவரி 28 |


# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2023 சனவரி


## முக்கிய பண்புகள்

- வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் சுருக்கமடைந்து காணப்பட்டது.
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்த அதேவேளையில் இறக்குமதிச் செலவினமானது தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் என்பன 2023 சனவரியில் தொடர்ந்தும் அதிகரித்தன.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 சனவரி இறுதியில் வலுவடைந்த அதேவேளையில் செலாவணி வீதமானது 2023 சனவரி காலப்பகுதியில் தொடர்ந்தும் நிலையாகக் காணப்பட்டது.
- 2023 சனவரி காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் சிறியளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த அதேவேளையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்


### ஏற்றுமதிகள்








| வர்த்தகப்பற்றாக்குறை | சன |
|---|---|
| 2022 | ஐ.அ.டொ 0.9 பில் |
| 2023 | ஐ.அ.டொ 0.4 பில் |


### இறக்குமதிகள்





### சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்




### தொழிலாளர் பணவனுப்பல்கள்





### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*





* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது


### கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)




### அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்கள்





### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூ)



## வணிகப்பொருள் வர்த்தக மீதி


ஏற்றுமதிகளின் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளில் பாரியளவிலான வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக, வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2022 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 857 மில்லியனிலிருந்து 2023 சனவரியில் ஐ.அ.டொலர் 410 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது. இருப்பினும், 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 358 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவடைந்து காணப்பட்டது. வர்த்தகப் பற்றாக்குறைக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: 2023 சனவரியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 சனவரியிலும் பார்க்க 2023 சனவரியில் ஐ.அ.டொலர் 978 மில்லியனிற்கு 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2022 செத்தெம்பரிலிருந்து அவதானிக்கப்பட்ட மிதமடைதலினை எதிர்பார்க்கப்பட்டதனை விட மெதுவான வேகத்தில் தொடர்ந்தன.** இவ்வீழ்ச்சியானது, சகல முக்கிய துறைகளிலும் அவதானிக்கப்பட்டதுடன் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட சுருக்கம் குறிப்பிடத்தக்கதாக காணப்பட்டது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** அநேகமான முக்கிய சந்தைகளுக்கான (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) தாழ்ந்தளவிலான கேள்வியின் விளைவாக குறைவடைந்த ஆடைகளின் ஏற்றுமதிகளின் பாரியளவிலான பங்களிப்புடன், கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, உயர்ந்தளவிலான நீர்க்கல விலைகளிற்கு மத்தியில் நீர்க்கலம் மற்றும் வானூர்தி எரிபொருள் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. மேலும், இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகளின் (முக்கியமாக, வீட்டுப்பாவனைக்கான இறப்பர் கையுறைகள்) வீழ்ச்சியடைகின்ற போக்கானது தொடர்ந்தபோதிலும்,


[1] இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II மற்றும் இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளன.

இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் பொறி மற்றும் பொறியியல் சாதனங்கள் (முக்கியமாக, இலத்திரனியியல் சாதனங்கள்) என்பவற்றிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** தெங்குசார் உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தென்னந்தும்பு மற்றும் தேங்காய்த் துருவல் என்பவற்றின் தாழ்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளினால் உந்தப்பட்டு வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், தாழ்ந்த ஏற்றுமதி அளவுகளுக்கு மத்தியில் தேயிலையின் உயர்ந்தளவிலான சராசரி ஏற்றுமதி விலைகளுடன் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேம்பட்டன. 2021/2022 காலப்பகுதியில் நிலவிய போதியளவிலான வளமாக்கிகளின் கிடைப்பனவின்மையின் காலங்கடந்த தாக்கத்தால் அநேகமாக சகல வேளாண்மை ஏற்றுமதிகளினதும் அளவுகள் பொதுவாக மிதமடைந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டன.


**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** பளிங்கு மற்றும் இயற்கைக் கனிமத் தூள் என்பவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2023 சனவரியில் மிதமடைந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது.** இதற்கமைய, இறக்குமதிகள் மீதான செலவினம் 2022 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,959 மில்லியனுடனும் 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,426 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் ஐ.அ.டொலர் 1,388 மில்லியனிற்கு 29.2 (ஆண்டிற்காண்டு) சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சகல துறைகளிலுமான செலவினத்தின் வீழ்ச்சியானது இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்த போதிலும், இடைநிலைப் பொருட்களின் வீழ்ச்சி பெருமளவு பங்களித்திருந்தது.


[2] இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு IV மற்றும் இணைப்பு Vஇல் காட்டப்பட்டுள்ளன.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வீழ்ச்சியடைந்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட குறைப்பினால் (2022 சனவரியில் கொவிட் தடுப்பு மருந்துகள் மீதான உயர்ந்தளவிலான செலவினத்தின் தளத் தாக்கத்தின் காரணமாக) முக்கியமாக உந்தப்பட்டிருந்தது. குறைந்தளவிலான தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகளின் (முக்கியமாக, அரிசி) காரணமாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினமும் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்:** புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் தாழ்ந்தளவிலான இறக்குமதிகளினால் (முதன்மையாக, துணிகள்) உந்தப்பட்டு, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டமையானது எதிர்வரும் காலப்பகுதியில் தாழ்ந்தளவிலான ஆடை ஏற்றுமதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. மேலும், அடிப்படை உலோகங்கள் (முதன்மையாக, இரும்பு மற்றும் உருக்கு), பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் மற்றும் கோதுமை என்பவற்றின் இறக்குமதியில் கணிசமானளவிலான வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. மாறாக, இவ்வகைப்பாட்டின பாரியளவிலான இறக்குமதிக் கூறான எரிபொருள் மீதான செலவினம், மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளின் உயர்ந்தளவிலான அளவுகளின் காரணமாக அதிகரித்த போதிலும், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மீதான செலவினம் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து (தாழ்ந்த அளவுகளின் காரணமாக) காணப்பட்டது.


**முதலீட்டுப் பொருட்கள்:** சகல மூன்று முக்கிய முதலீட்டுப் பொருள் துணைத்துறைகளினதும் அதாவது, பொறி மற்றும் கருவிகள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் கீழ் பட்டியலிடப்பட்ட அநேகமாக சகல வகைப் பொருட்களும் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தமையினால் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றும்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**





**மூலம்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது இறக்குமதி விலைகளின் வீழ்ச்சி ஏற்றுமதி விலைகளின் வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2022 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் 3.1 சதவீதத்தினால் மேம்பட்டது.


**வரைபடம் 7: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

2023 சனவரியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 5.3 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 15.7 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தமையானது ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குத் தாழ்ந்தளவிலான ஏற்றுமதி விலைகள் பங்களித்திருந்தமையைச் சுட்டிக்காட்டியது.


**வரைபடம் 8: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண் என்பன முறையே 13.3 சதவீதத்தினாலும் 18.3 சதவீதத்தினாலும் (ஆண்டிற்காண்டு) வீழ்ச்சியடைந்தமையானது, அளவு மற்றும் அலகுப் பெறுமதித் தாக்கங்களினால் இறக்குமதி வீழ்ச்சி தோற்றுவிக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 9: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**





**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் முன்னைய ஆண்டின் சனவரி மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 259 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 437 மில்லியனிற்கு மீட்சியடைந்தன. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2023 சனவரி மாத காலப்பகுதியில் 24,236ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் தேர்ச்சியற்ற (7,556), தேர்ச்சிபெற்ற (7,283) மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் (6,120) ஆகிய வகைகளை உள்ளடக்கியுள்ளன.


**சுற்றுலாப் பயணிகள்:** 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 91,961 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடனும் 2022 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 82,327 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடனும் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 102,545இற்குக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டன. 2023 சனவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக ருஷியா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் அவுஸ்திரேலியா என்பன காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 127 மில்லியனுடனும் முன்னைய ஆண்டின் சனவரி மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 152 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 162 மில்லியனாக[3] மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 10: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 11: சுற்றுலா[3] மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்திஅதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

---

[3] தற்காலிகமானது


## நிதியியல் பாய்ச்சல்கள்

2023 சனவரியில் அரச பிணையங்கள் சந்தையில் ஐ.அ.டொலர் 0.4 மில்லியன் பெறுமதியிலான வெளிநாட்டு முதலீடுகளின் சிறியளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2023 சனவரி மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட சிறியளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

2023 சனவரி இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2.1 பில்லியனாக விளங்கின. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கி 2023 சனவரியில் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய உள்ளீர்ப்பொன்றினைப் பதிவுசெய்தமையானது 2023 சனவரி இறுதியில் திரவ ஒதுக்குகளில் சிறியளவிலான மேம்பாடொன்றினைத் தோற்றுவித்தது.

**வரைபடம் 12: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**





**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்


**சிறிதளவானதொரு உயர்வுடன் 2023 சனவரி முழுவதும் செலாவணி வீதம் தொடர்ந்தும் நிலையாக காணப்பட்டது.** இதற்கமைய, 2023 பெப்புருவரி 28 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.4 சதவீதம் கொண்ட உயர்வொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2023 பெப்புருவரி 28 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றிற்கெதிராக உயர்வடைந்து காணப்பட்டது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமானது (REER 24) 2022இன் முற்பகுதியில் குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்து காணப்பட்டதுடன் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்குப் பெருமளவு கீழால் தொடர்ந்தும் காணப்பட்டமையானது இலங்கையின் வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையில் மேம்பாடொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 13: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 14: உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2021 | 2022 | 2023 (பெப்புருவரி 28 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -7.0% | -44.8% | +0.4% |
| யூரோ | +1.1% | -41.4% | +1.0% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.0% | -38.1% | +0.3% |
| யப்பானிய யென் | +3.8% | -36.4% | +3.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -1.2% | -40.8% | +0.7% |
| இந்திய ரூபா | -5.5% | -38.6% | +0.3% |

*தேய்வு (-)/உயர்வு (+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**2023 பெப்புருவரிக்கான வெளிநாட்டுத்துறைப் பத்திரிகை வெளியீடு 2023 மாச்சு 31 அன்று வெளியிடப்படும்.**

**இணைப்பு I:**

**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)**

| வகை | 2021 ஐ.அ.டொ.மில் | 2022 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சனவரி 2022 ஐ.அ.டொ.மில் | சனவரி 2023 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 12,499 | 13,106 | 4.9 | 1,103 | 978 | -11.3 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 20,637 | 18,291 | -11.4 | 1,959 | 1,388 | -29.2 |
| வர்த்தக மீதி | -8,139 | -5,185 | | -857 | -410 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 507 | 1,136 (ஆ) | - | 152 (ஆ) | 162 (இ) | 6.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,491 | 3,782 (ஈ) | -31.1 | 259 | 437 | 68.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (உ) | -238 | 182 | | 36 | 1 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் (மொத்தம்) | 2,435 | 2,401 | | 135 | 3 (ஊ) | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | 17 | 69 | | 5 | 3 | |
| நீண்ட காலக் கடன்கள் | 1,608 | 2,333 | | 129 | வி.கி | |
| கூட்டுக் கடன்கள் | 810 | - | | - | - | |
| திரண்ட நிலுவை | -3,967 | -2,806 (ஈ) | | -1,408 | 211 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022இல் திருத்தப்பட்டது
(இ) இத்தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2023 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) திருத்தப்பட்டது
(உ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது
(ஊ) 2023 சனவரி மாதத்திற்கான நீண்ட காலக் கடன்களிற்கான தரவுகள் கிடைப்பனவாகவிருக்கவில்லை

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

**இணைப்பு II:**

## இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சனவரி 2022 ஐ.அ.டொ.மில் | சனவரி 2023 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,702.1** | **10,465.3** | **7.9** | **891.9** | **781.3** | **-12.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 586.9 | 519.5 | -11.5 | 41.7 | 34.7 | -16.7 |
| விலங்குத்தீன் | 149.4 | 170.5 | 14.1 | 12.8 | 16.2 | 26.0 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 5,435.1 | 5,952.0 | 9.5 | 516.1 | 424.4 | -17.8 |
| இதில் ஆடைகள் | 4,951.5 | 5,483.1 | 10.7 | 478.9 | 388.9 | -18.8 |
| புடவைகள் | 355.4 | 353.7 | -0.5 | 27.7 | 27.4 | -1.2 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 128.1 | 115.2 | -10.1 | 9.4 | 8.1 | -14.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 1,050.4 | 977.0 | -7.0 | 82.0 | 72.7 | -11.4 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 276.8 | 450.6 | 62.8 | 31.9 | 54.1 | 69.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 500.9 | 580.9 | 16.0 | 44.6 | 50.8 | 13.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 148.2 | 129.3 | -12.8 | 8.9 | 5.7 | -35.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 506.4 | 568.0 | 12.2 | 67.2 | 46.4 | -30.9 |
| இரசாயன உற்பத்திகள் | 223.2 | 223.5 | 0.1 | 17.9 | 12.7 | -28.9 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 129.9 | 136.9 | 5.4 | 11.7 | 9.7 | -16.9 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 50.0 | 53.1 | 6.1 | 4.2 | 7.6 | 79.8 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 58.4 | 85.8 | 46.9 | 4.3 | 5.2 | 23.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 78.6 | 60.9 | -22.5 | 6.3 | 4.1 | -33.8 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 156.4 | 176.7 | 13.0 | 14.2 | 10.3 | -27.7 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 37.4 | 38.1 | 1.8 | 2.6 | 3.0 | 17.3 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 314.1 | 342.4 | 9.0 | 25.6 | 23.6 | -7.8 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,729.5** | **2,568.0** | **-5.9** | **204.5** | **191.0** | **-6.6** |
| தேயிலை | 1,324.4 | 1,258.8 | -5.0 | 91.2 | 99.6 | 9.1 |
| இறப்பர் | 42.2 | 41.4 | -1.8 | 5.1 | 3.2 | -37.2 |
| தேங்காய் | 425.2 | 400.3 | -5.9 | 33.3 | 22.0 | -34.1 |
| வாசனைத்திரவியங்கள் | 454.8 | 368.7 | -18.9 | 35.0 | 34.1 | -2.7 |
| காய்கறிகள் | 28.5 | 26.7 | -6.6 | 2.2 | 2.4 | 5.9 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 31.6 | 24.4 | -22.8 | 2.3 | 0.7 | -67.3 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 148.8 | 178.8 | 20.2 | 11.2 | 8.1 | -27.9 |
| கடலுணவு | 274.1 | 269.0 | -1.8 | 24.1 | 20.9 | -13.1 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **44.5** | **50.0** | **12.3** | **4.3** | **3.6** | **-15.8** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **22.5** | **23.2** | **3.2** | **1.8** | **2.3** | **26.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **12,498.6** | **13,106.4** | **4.9** | **1,102.6** | **978.2** | **-11.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சனவரி 2022 ஐ.அ.டொ.மில் | சனவரி 2023 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **2,846.0** | **2,701.8** | **-5.1** | **215.8** | **209.2** | **-3.1** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 316.0 | 301.2 | -4.7 | 27.2 | 23.8 | -12.5 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 71.8 | 77.5 | 7.9 | 5.8 | 5.9 | 1.8 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 468.2 | 449.0 | -4.1 | 39.1 | 25.6 | -34.4 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 1,742.9 | 1,611.1 | -7.6 | 125.8 | 133.3 | 5.9 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **145.2** | **135.8** | **-6.5** | **8.7** | **9.5** | **9.7** |
| 11 குடிபானங்கள் | 33.3 | 46.7 | 40.2 | 2.4 | 4.0 | 68.8 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 112.0 | 89.2 | -20.4 | 6.3 | 5.5 | -12.6 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **433.2** | **450.3** | **3.9** | **38.0** | **32.4** | **-14.8** |
| 23 மசகு இறப்பர் | 43.1 | 42.4 | -1.5 | 5.2 | 3.3 | -36.1 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 240.3 | 228.6 | -4.9 | 18.7 | 17.2 | -8.3 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **506.4** | **568.0** | **12.2** | **67.2** | **46.4** | **-30.9** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 462.9 | 544.1 | 17.5 | 51.3 | 46.4 | -9.5 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 43.5 | 23.9 | -44.9 | 15.9 | - | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **128.9** | **89.9** | **-30.3** | **6.8** | **4.0** | **-41.6** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 86.1 | 75.4 | -12.4 | 5.6 | 3.9 | -30.5 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **291.7** | **271.5** | **-6.9** | **20.8** | **15.8** | **-23.9** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **1,700.7** | **1,876.0** | **10.3** | **145.7** | **155.5** | **6.7** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 684.5 | 680.3 | -0.6 | 53.8 | 51.9 | -3.4 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 458.4 | 447.1 | -2.5 | 36.2 | 30.3 | -16.4 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 335.1 | 510.5 | 52.3 | 36.1 | 58.6 | 62.4 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **631.8** | **692.1** | **9.5** | **52.2** | **55.3** | **6.0** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 318.4 | 364.2 | 14.4 | 27.4 | 30.8 | 12.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **5,813.1** | **6,320.3** | **8.7** | **547.3** | **450.0** | **-17.6** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 5,360.0 | 5,832.0 | 8.8 | 510.7 | 412.6 | -19.2 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **1.5** | **0.8** | **-47.7** | **…** | **…** | **-** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **12,498.6** | **13,106.4** | **4.9** | **1,102.6** | **978.2** | **-11.3** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை
… புறக்கணிக்கத்தக்கவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சனவரி 2022 ஐ.அ.டொ.மில் | சனவரி 2023 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **3,848.7** | **2,813.0** | **-26.9** | **360.0** | **218.5** | **-39.3** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 1,666.5 | 1,607.9 | -3.5 | 187.2 | 118.3 | -36.8 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 97.4 | 430.5 | 342.3 | 60.5 | 15.3 | -74.7 |
| பால் உற்பத்திகள் | 317.7 | 225.3 | -29.1 | 29.9 | 16.2 | -45.8 |
| காய்கறிகள் (ஆ) | 384.3 | 318.4 | -17.1 | 29.6 | 24.1 | -18.5 |
| கடலுணவு | 122.3 | 66.4 | -45.7 | 8.5 | 3.6 | -57.5 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 288.8 | 257.8 | -10.7 | 26.0 | 32.8 | 25.9 |
| வாசனைத்திரவியங்கள் | 127.2 | 136.6 | 7.4 | 11.9 | 9.9 | -16.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 328.8 | 172.8 | -47.4 | 20.8 | 16.4 | -21.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 2,182.2 | 1,205.1 | -44.8 | 172.8 | 100.2 | -42.0 |
| தனியாள் ஊர்திகள் | 12.8 | 11.7 | -8.5 | 0.7 | 1.5 | 121.0 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 882.5 | 533.4 | -39.6 | 78.9 | 51.0 | -35.4 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 257.1 | 85.5 | -66.7 | 16.3 | 4.2 | -73.9 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 221.3 | 215.6 | -2.6 | 22.9 | 18.2 | -20.3 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 382.9 | 69.0 | -82.0 | 16.7 | 3.7 | -78.1 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 161.2 | 116.3 | -27.9 | 15.3 | 7.0 | -54.4 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 264.4 | 173.7 | -34.3 | 22.0 | 14.5 | -34.1 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **12,308.9** | **12,438.8** | **1.1** | **1,212.5** | **970.5** | **-20.0** |
| எரிபொருள் | 3,742.9 | 4,896.8 | 30.8 | 430.3 | 481.1 | 11.8 |
| இதில் மசகெண்ணெய் (இ) | 625.1 | 483.8 | -22.6 | 58.5 | 107.6 | 83.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 2,840.0 | 4,048.2 | 42.5 | 311.2 | 287.1 | -7.7 |
| நிலக்கரி | 277.8 | 364.8 | 31.3 | 60.6 | 86.4 | 42.7 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 143.6 | 203.8 | 41.9 | 14.0 | 21.2 | 51.3 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 3,066.9 | 3,065.2 | -0.1 | 316.5 | 217.5 | -31.3 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 468.9 | 465.9 | -0.6 | 41.3 | 37.0 | -10.5 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 264.2 | 214.5 | -18.8 | 17.0 | 22.3 | 31.4 |
| கோதுமை மற்றும் சோளம் | 418.3 | 303.1 | -27.5 | 41.7 | 5.6 | -86.7 |
| அடிப்படை உலோகங்கள் | 866.4 | 323.2 | -62.7 | 74.8 | 13.1 | -82.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 765.7 | 650.8 | -15.0 | 77.1 | 37.4 | -51.5 |
| இரசாயன உற்பத்திகள் | 1,074.4 | 966.2 | -10.1 | 86.9 | 60.5 | -30.3 |
| வளமாக்கி | 158.2 | 275.9 | 74.4 | 2.5 | 9.6 | 285.6 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 400.7 | 334.7 | -16.5 | 33.8 | 14.2 | -57.9 |
| கனிம உற்பத்திகள் | 158.9 | 123.7 | -22.1 | 16.5 | 5.6 | -66.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 779.7 | 615.0 | -21.1 | 60.0 | 45.4 | -24.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **4,462.7** | **3,030.5** | **-32.1** | **386.7** | **198.9** | **-48.6** |
| பொறி மற்றும் கருவிகள் | 2,809.5 | 1,969.0 | -29.9 | 243.8 | 132.6 | -45.6 |
| கட்டடப் பொருட்கள் | 1,248.9 | 926.3 | -25.8 | 124.0 | 63.1 | -49.1 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 398.5 | 132.1 | -66.8 | 18.7 | 2.7 | -85.4 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 5.8 | 3.0 | -47.9 | 0.2 | 0.4 | 58.8 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **17.1** | **8.8** | **-48.8** | **0.1** | **0.1** | **-37.2** |
| **மொத்த இறக்குமதிகள்** | **20,637.4** | **18,291.0** | **-11.4** | **1,959.4** | **1,387.9** | **-29.2** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **16,894.6** | **13,394.2** | **-20.7** | **1,529.1** | **906.8** | **-40.7** |

(அ) தற்காலிகமானவை

(ஆ)பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தரவுகளின் கிடைப்பனவின்மையினால் மசகெண்ணெய்ப் பெறுமதிகள் சுங்கத் தரவுகளின் அடிப்படையிலானவை.

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு V:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | 2021 (ஐ.அ.டொ. மில்) | 2022 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சனவரி 2022 ஐ.அ.டொ.மில் | சனவரி 2023 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **2,275.2** | **2,162.2** | **-5.0** | **248.7** | **145.2** | **-41.6** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 318.1 | 225.7 | -29.1 | 30.0 | 16.2 | -45.9 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 123.6 | 67.7 | -45.2 | 8.6 | 3.7 | -57.3 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 513.0 | 729.0 | 42.1 | 102.0 | 20.6 | -79.8 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 457.7 | 365.4 | -20.2 | 36.3 | 27.1 | -25.5 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 288.9 | 257.8 | -10.7 | 26.0 | 32.8 | 25.9 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 169.5 | 180.0 | 6.2 | 16.5 | 13.4 | -18.9 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **76.8** | **101.0** | **31.5** | **7.8** | **11.6** | **49.1377** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **584.7** | **465.3** | **-20.4** | **49.0** | **25.8** | **-47.4** |
| 23 மசகு இறப்பர் | 351.0 | 283.6 | -19.2 | 28.2 | 10.3 | -63.6 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 25.0 | 30.5 | 22.2 | 1.8 | 3.8 | 114.0 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள் (ஆ)** | **3,742.9** | **4,896.8** | **30.8** | **430.3** | **481.1** | **11.8** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 3,118.4 | 4,288.0 | 37.5 | 337.4 | 360.9 | 6.9 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 346.6 | 243.9 | -29.6 | 32.3 | 33.8 | 4.7 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **285.2** | **79.8** | **-72.0** | **7.8** | **5.0** | **-36.8** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 262.3 | 65.6 | -75.0 | 5.7 | 4.0 | -29.5 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **2,847.9** | **2,392.2** | **-16.0** | **246.8** | **158.3** | **-35.9** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 823.1 | 502.3 | -39.0 | 75.4 | 47.5 | -37.0 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 157.6 | 275.8 | 74.9 | 2.5 | 9.6 | 285.8 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 561.2 | 438.6 | -21.8 | 57.5 | 21.7 | -62.3 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 173.3 | 174.7 | 0.8 | 18.7 | 13.4 | -28.6 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **5,976.8** | **5,114.1** | **-14.4** | **587.5** | **356.1** | **-39.4** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 442.0 | 436.7 | -1.2 | 37.5 | 36.2 | -3.5 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 3,007.8 | 2,991.0 | -0.6 | 308.5 | 209.5 | -32.1 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 525.2 | 485.0 | -7.7 | 55.0 | 38.7 | -29.7 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 1,071.4 | 456.3 | -57.4 | 96.3 | 22.2 | -76.9 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **3,876.2** | **2,278.1** | **-41.2** | **294.5** | **146.3** | **-50.3** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 652.0 | 396.5 | -39.2 | 56.6 | 18.9 | -66.5 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 599.2 | 430.9 | -28.1 | 46.1 | 27.7 | -39.8 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 354.6 | 161.7 | -54.4 | 29.0 | 10.9 | -62.6 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 785.3 | 231.6 | -70.5 | 38.6 | 13.7 | -64.6 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 750.2 | 633.1 | -15.6 | 62.2 | 43.2 | -30.5 |
| 78 வீதி ஊர்திகள் | 327.8 | 158.2 | -51.7 | 20.9 | 9.5 | -54.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **953.3** | **791.3** | **-17.0** | **86.5** | **58.3** | **-28.3** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 190.0 | 191.5 | 0.8 | 19.4 | 16.5 | -14.8 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 237.7 | 143.2 | -39.7 | 15.7 | 10.6 | -32.4 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **18.4** | **10.3** | **-44.3** | **0.4** | **0.2** | **-37.4** |
| **மொத்த இறக்குமதிகள்** | **20,637.4** | **18,291.0** | **-11.4** | **1,959.4** | **1,387.9** | **-29.2** |

(அ) தற்காலிகமானது

(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தரவுகளின் கிடைப்பனவின்மையினால் மசகெண்ணெய்ப் பெறுமதிகள் சுங்கத் தரவுகளின் அடிப்படையிலானவை.

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf